தும்பளை

# புனித லூர்து அன்னை திருவிழா



**11 - 02 - 1994**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருகைப் பாடல்

### 1 ஆலய மணி ஒலி

எடுப்பு

ஆலய மணியொலி ஒலித்தது
ஆண்டவன் சந்நிதி இணைந்திடுவோம்
புது கனவுகள் புது உறவுகள் — இங்கு
மலரட்டும் அருள் பொழியட்டும்

அடி 1

உயர்வுகள் தாழ்வுகள் மறந்து — இன்று
இணைவோம் விருந்தில் கலந்து
குடும்ப உணர்வினில் ஒன்று கூடிப் — பெற்ற
வாழ்வினை எங்கும் கொடுப்போம்
இது தன்னையே தந்திடும் தலைவன் பலி
இனி நம்மையே ஈந்திட அழைக்கும் பலி (2)

அடி 2

பழமைகள் எல்லாம் களைந்து — இன்று
நுழைவோம் இறைவன் குலமாய்
அன்பிலும் நட்பிலும் நாம் தொடர்ந்து இன்று
அளிப்போம் தியாகப் பலியாய்
இது தன்னையே தந்திடும் தலைவன் பலி
இனி நம்மையே ஈந்திட அழைக்கும் பலி (2)

(ஆன. ராகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 இறைவன் வாழும் இல்லம்

### எடுப்பு

இறைவன் வாழும் இல்லம் என்பது
ஆலயமாம் — இங்கு
இறைமக்கள் யாவரும் இணைந்து வருவது
ஆனந்தமாம் — நாம்
இறைவன் தெரிந்த புது இனம் — இறை
அரச குருத்துவத் திருக் குலம் — இந்த
உண்மையை நானிலம் முழுவதும்
பரப்பணும் அன்பு மலரணும் (2)

### அடி 1

மனம் தேடும் இறைவனைத்
தினந் தோறும் காண
மாண்புறு ஆலயம் இருக்கின்றது — இறை
மலர் பாதம் தொழுது பணிகின்ற போது
நம் உள்ளம் ஆலயம் ஆகின்றது
இறை ஆவி குடிகொள்ளும் உயிருள்ள ஆலயம்
என்றைக்கும் நாம் தானே (2) இந்த
சிந்தனை தேன்தானே

### அடி 2

கரம் கூப்பி இறைவனைத் தினம் தோறும் காண
பாரங்கள் நம் நெஞ்சில் குறைகின்றது — அவர்
வரம் வேண்டி எல்லோரும் பணிகின்ற போது
நம் வாழ்வு அருளாலே நிறைகின்றது
இறை ஆவி குடிகொள்ளும் (உற. கீதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 இதயங்கள் சங்கமம்

எடுப்பு

இதயங்கள் சங்கமம் ஆகிவிடும் இடமிது
இறைவனின் கருணையில் மலர்ந்திடும் உறவிது
இறைவனே அழைத்ததால்
இனியென்ன தடையுண்டு
நிறைந்திடும் மகிழ்வுடன் ஆலயம் நுழைந்திடு (2)

அடி 1

உலகினில் உயிரினம் தோன்றிடும் முன்னர்
உன்னதர் கிறிஸ்துவில் தேர்ந்து கொண்டார்
உரிமையின் பிள்ளைகள் ஆகிய அவர் தம்
உறைவிடம் இதுவே உவகையின் நிறைவே

அடி 2

ஆதியில் சோதரர் வாழ்ந்ததின் நினைவாய்
அருட் ஜோதி பலியில் பங்கெடுப்போம்
நீதியும் அன்பும் நெஞ்சினில் நிறைய
நீதியின் தேவன் இல்லிடம் செல்வோம்

(இதயசுரம் — 1)

## தியானப் பாடல்

சங்கீதம் — 45

## 4 கலங்காதே என் நெஞ்சமே

எடுப்பு

கலங்காதே என் நெஞ்சமே (2)
கர்த்தர் இயேசு அன்பு செய்ய
காலமெல்லாம் காத்திருக்க
கலக்கம் ஏன் நெஞ்சமே (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி 1

இருளும் புயலும் உன்னை என்ன செய்திடும்
அருளும் அன்பும் பொழியும் யேசு
அருகில் இருக்கையில்
வாழ்வில் வீழ்ந்து வருந்தும்போது
தோள் கொடுக்கின்றார்
தாழ்ந்து வாடும்போது தயவு காட்டுவார்
தயவு காட்டுவார் – யேசு தயவு காட்டுவார் (2)

அடி 2

உலகம் வெறுக்கும்போது உன்னில்
நிலைக்கின்றார்
உயிர்ப்பும் உயிரும் ஈந்து நாளும்
உடனிருக்கின்றார்
துன்ப துயரம் தூரப்போகும் துணிந்து நின்றிடு
தூய தேவன் அருளை என்றும் நம்பிடு
என்றும் நம்பிடு அவரை என்றும் நம்பிடு ( 2 )

சங்கீதம் – 102 : 1 - 6, லூக். 12 : 24 - 27

## 5 நெஞ்சே உன்

எடுப்பு

நெஞ்சே உன் ஆண்டவரைப் போற்று
அன்பின் இறைவன் அமைதி தருவார்
அள்ளி அணைத்துக் கொள்வார்
எனவே நெஞ்சே

அடி 1

வானத்துப் பறவைக்கும் — உணவை
வாரியே வழங்கிடுவார்
வயல்வெளி மலர்களுமே — மகிழ
வண்ணத்துகில் உடுத்துகின்றார்
தாய்தன் சேயை மறந்தாலும்
இறைவன் உன்னை மறப்பாரோ
மனமே கலக்கமேன் இறைவன் நல்லவரே — நம்
இறைவன் நல்லவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி 2

பாவத்தை மன்னிக்கிறார் — இறைவன்
பாவியை ஏற்றுக்கொள்வார்
நீதியின் தலைவன் ஆவார் — நம்மை
நேர்வழி நடத்திடுவார்
இருளே நிறைந்த வாழ்க்கையுமே
அருளால் மலர்ந்து ஒளிர்ந்திடுமே
மனமே கலக்கமேன் ...

## 6 நீ எந்தன் பாறை

தொகையறா

இயேசுவே இயேசுவே — நீ
எந்தன் பாறை என் அரணான இயேசுவே
இயேசுவே இயேசுவே

எடுப்பு

நீ எந்தன் பாறை என் அரணான இயேசுவே
நீ எந்தன் உள்ளத்தின் அணையாத தீபமே
அணையாத தீபமே இயேசுவே இயேசுவே

அடி 1

ஒளிகொண்டு தேடினால் இருள் நில்லுமோ
உன் துணையில் வாழ்க்கையில் துயர் வெல்லுமோ
தடைகோடி கோடி வரலாம் உள்ளம்
தவித்தோடி விடலாம்

ஆனாலும் உன் வார்த்தை உண்டு
எது போனாலும் உனில் தஞ்சம் உண்டு
இயேசுவே இயேசுவே (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி 2

இரவுக்கும் எல்லை ஓர் விடியலன்றோ
முடிவாக வெல்லுவதுமுன் நன்மையன்றோ
தளராது வாழ்வோம் அருள் அணையாது
காப்போம்
என்றென்றும் உன் ஆசி கொண்டு
வரும் நல்வாழ்வை கண்முன்னே கண்டு
யேசுவே யேசுவே ( 2 )

## காணிக்கைப் பாடல்

### 7. தெய்வீகப் பலியில்

எடுப்பு

தெய்வீகப் பலியில் உறவாடும் தெய்வமே
உன்னோடு பலியாக நானும் இணைகின்றேன்
காணிக்கை ஏற்றிடுவாய் (2)

அடி 1

வானம் காணும் ஒளியெல்லாம்
என் தேவன் தந்த காணிக்கை
மேகம் சிந்தும் துளியெல்லாம்
என் தேவன் தந்த காணிக்கை
இந்த நினைவில் எந்தன் வாழ்வை
காணிக்கை தந்தேன் உம்மலர் பாதம்

அடி 2

வேதம் சொன்ன வழியெல்லாம்
என் தேவன் தந்த காணிக்கை
பாதம் படைத்த கனியெல்லாம்
என் தேவன் தந்த காணிக்கை
இந்த நினைவில் எந்தன் வாழ்வை
காணிக்கை தந்தேன் உம்மலர் பாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. உன்னிடத்தில் என்ன இல்லை

எடுப்பு

உன்னிடத்தில் என்ன இல்லை
என்னிடத்தில் ஒன்றும் இல்லை (2)
இயேசு உன் பாதத்தில்
காணிக்கை நான் வைக்க
ஏதொன்றும் சொத்துமில்லை
பாவம் செய்தேன் இரக்கத்தில் சுத்தமில்லை

அடி 1

கண்களை நான் தந்திருப்பேன்
கண்களுக்கோ பார்வையில்லை — (2)
இறைவா உன் பாதத்தில்
உள்ளத்தை நான் வைக்க
உள்ளத்தில் ஞானமில்லை
காய்ந்தே போனேன் கண்ணீரும் கண்ணிலில்லை

அடி 2

நெஞ்சுக்குள்ளே வந்துவிடு
நிம்மதியைத் தந்துவிடு
நேசித்துவந்த என் நெஞ்சத்தைச் சுத்தம் செய்
நெற்றிக்கு முத்தம் கொடு
நீயே என்னை காணிக்கை பெற்றுக்கொள்.

## 9. பலிப் பொருள் தருவதன்

பலிப்பொருள் தருவதின் பொருளுணர்ந்தேன்
—என்னைப்
பலியெனத் தருகின்றேன் மனமுவந்து
எடுத்தருள்வாய் இறைவா — அருள்
கொடுத்தருள்வாய் தலைவா } 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி 1

நீ ஒரு இதயத்தை எனக்குத் தந்தாய் — அதில்
நீதியும் அன்பையும் நீ நிறைத்தாய்
பலன் தரும் யாவையும் கொடுக்கச்
சொன்னாய் — என்னைப்
பயனுள்ள பலியாய் மாறிடச் சொன்னாய்
பலன் தரும் பலியென வருகின்றேன்

அடி 2

உடைந்திடும் விதை என்றும் முளைப்பதில்லை
— மண்ணில்
மடியவில்லை எனில் உழைப்பதில்லை
பிறர்க்கென மடிவதில் தவறும் இல்லை அதில் (2)
இறைவனுக்கேற்ற பலியும் இல்லை
புதைத்திடும் நிலையென வாழ்ந்திடுவேன்

## திருவிருந்துப் பாடல்

### 10 என் ஆயன் யேசு

எடுப்பு

என் ஆயன் யேசு என்னுள்ளம் தேடி
வருகின்ற வேளையிது
என் ஆன்மா அவரை ஏற்றிப் போற்றி
மகிழும் வேளையிது
என் தவம் நான் செய்தேன் } 2
என் நன்றி நான் சொல்வேன்

அடி 1

பசியால் வாடும் ஏழையின் நிலையில்
பாவிநான் நின்றிருந்தேன்
பரமன் யேசு என் பாவத்தை அகற்றி
அருளமுதை ஈந்தார் ( 2 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி 2

ஆயிரம் குறைகள் என்னிடம் கண்டும்.
அணைத்திடவே வந்தார்
ஆண்டவர் இயேசு அன்பினால் என்னை
மாற்றிடவே வந்தார் ( 2 )

அடி 3

நண்பனுக்காய்த்தரும் உயிர் தியாகம் மிஞ்சும்
நட்பின்று எங்குள்ளதோ
என் அன்பர் யேசு சிலுவையில் மரித்து
எனைக்காத்தார் என்று சொல்லவோ ( 2 )

## 11 பூம்புனல் அருகே

எடுப்பு

பூம்புனல் அருகே அசைந்திடும் நாணல்
பாங்குற செழித்து வளர்வது போல
யேசுவே உந்தன் வரவினால் நானும்
இம்மையில் உயர்வேன் மறுமைக்கு வாழ்வேன்

தொடுப்பு

வான் மழையே தேன்சுவையே
தேவனின் திருவிருந்தே

அடி 1

உலகிய லன்பை தேடி அலைந்து } 2
உள்ளம் சோர்ந்து விட்டேன்
உன் உயர் அன்பை சுவைத்திட நானும் ( 2 )
என்னிடம் எழுந்து வாராயோ
மதுரச் சுவையே கதிதரு
கவிதைச்சரமே உனதுரு
தினமும் தொழவே பணிபுரிந்திடுவேன்
வருவேன் உனதடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி 2

காணல் நீரைத் தேடி நானும்
காலம் போக்கி விட்டேன் } 2
காணும் தெய்வம் நீயே வாராய் ( 2 )
ஆளும் என்னை என்றும் நீயே
மதுரச் சுவையே .....

## 12 உங்களுக்காக

எடுப்பு

உங்களுக்காக கையளிக்கும் இயேசுவின் உடலிது
இதைவாங்கி உண்ணுங்கள் புதுவாழ்வு காணுங்கள்
இயேசுவின் உடலாக மாறுங்கள்

அடி 1

பருகி மகிழும் கிண்ணம் ஒன்று — இனி
பகைமை உணர்வு நம்மில் எதற்கு
விருந்தில் வழங்கும் அப்பம் ஒன்று (2)
இனி உயர்வு தாழ்வு நம்மில் எதற்கு
ஒருகோடி கிளையென நாமினி இணைந்து
சமத்துவ பயணம் பாரினில் தொடர்ந்து
அன்பின் கனிகள் தருவோம்

அடி 2

புதிய உலகம் ஒன்று மலர — இறை
அரசின் கனவு எங்கும் விடிய
பழைய மனிதன் தன்னைக் களைய ( 2 )
இங்கு புதிய இயல்பை அன்பில் அணிய
தனதுடல் உடைத்தவர் அன்னமாய்த் தந்தார்
ஒருமைப் பாட்டின் சின்னமாய் வந்தார்
அவரின் உடலை உண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி 3

உரிமை அடிமை என்ற பேதம் — இந்த
உணவை உணர்ந்து உண்ண
மாறும் ஏழ்மை வறுமை என்னும் காயம் (2)
பெற்ற வாழ்வைப் பகிர இங்கு ஆறும்
தன்னுயிர் தியாகம் ஏற்றிட
அழைக்கும் விண்ணக விருந்தில்
கலந்திட எழுவோம் கொடுத்து நிறைவக்
காண்போம்

## 13 செந்தமிழில் உந்தன்

எடுப்பு

செந்தமிழில் உந்தன் புகழ் எழுதி — நான்
பாடிடுவேன் இறைவா — என்
சிந்தனையில் நீ இருந்து வாழ
எழுந்தருள்வாய் தலைவா — என்னில் ( 2 )

அடி 1

உன் உடல் உயிர்த்ததுன் வல்லமையால்
உலகினர் உயிர்ப்பதுன் வல்லமையால்
என்னுடல் உயிருடன் வாழ்ந்திடவே
இறைமகனே இன்று எழுந்தருள்வாய் ( 2 )

அடி 2

உன்னுயிர் தியாகம் புரிந்ததனால்
மன்னுயிர் தினமும் மகிழ்கின்றது
என்னுயிர் மெழுகாய் கரைவதனால்
என்னுயிர் காத்திட எழுந்தருள்வாய் ( 2 )

அடி 3

பாலையில் மன்னா வழங்குகின்றாய்
பலியினில் உன்னை வழங்குகின்றாய்
காலையில் உணவின்றித் தவிக்கின்றேன்
கனியமுதாய் என்னில் எழுந்தருள்வாய் ( 2 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14 அன்புத் தெய்வமே

எடுப்பு

அன்புத் தெய்வமே எந்தன் தீபமே
எந்நாளும் உனைப்பாட
என் வாழ்வை உனதாக்க
உனதருள் பொழிந்திடுவாய்

அடி 1

வாழ்வின் பொருள் தேடி நான்செல்லும் வழியில்
வழிகாட்டி நீயாகினாய்
இனி வாழ்ந்து பயனில்லை என சோர்ந்த நிலையில்
துணையாக நீ மாறினாய்
என் தெய்வமே (2) என் நெஞ்சம்
இனி நாளும் உனில் வாழுமே

அடி 2

பலகோடி துன்பங்கள் எனைச்சூழ்ந்த போதும்
என் நெஞ்சில் துயரில்லையே
கரம் தந்து கரைசேர்க்கும் உன் அன்பு உள்ளம்
என் துன்ப சுமை தாங்குமே
என் தெய்வமே (2) நமக்குள்ளே
ஒருபோதும் பிரிவில்லையே.

## நன்றிப் பாடல்

## 15. பாடிடுவேன் போற்றிடுவேன்

எடுப்பு

பாடிடுவேன் போற்றிடுவேன் — பாதத்தில்
பணிந்து நான் வணங்கிடுவேன்
பரவி எந்தன் பெயர் சொல்லி அன்புடனே நீ அழைத்து
ஆதரவாய் என்னை நடத்திடும் உன்புகழ்
—பாடிடுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி 1

நெஞ்சத்திலே நிறைந்ததெல்லாம் நீங்காத
உன் நினைவே
ஆண்டவரே யேசுவே ஆளுகின்றாய் என்
இதயத்தையே
அச்சமில்லை......... அதிர்ச்சி இல்லை.........
அலைந்திடும் கடலலை ஓய்ந்திடும் வரையில் நான்

அடி 2

இலையுதிர்ந்த மரமதைப்போல் நான் தனியே
வாடினாலும்
நிலைகுலைய விடமாட்டீர் எனதருகில்
இருக்கின்றீர்
அச்சமில்லை ......... அதிர்ச்சி இல்லை .........
அலைந்திடும் கடலலை ஓய்ந்திடும் வரையில்நான்

## 16. இதயமே எழுந்திடும்

தொகையறா

இதயமே எழுந்திடும் இறைவா — உனை
இசையுடன் தொழுதேன் தலைவா,

எடுப்பு

இதயமே எழுந்திடும் இறைவா — உனை
இசையுடன் தொழுதேன் தலைவா (2)
அநம்புவியெல்லாம் உம்பெயர் — ஓங்கிடவே
கவிதையில் தொடுப்பேன் உன் புகழே.

அடி 1

என் பாமலர்கள் வந்து விழும்
உன் பாதங்களே என் இல்லமாகும்
அன்பால் இங்கே நான் எழுப்பும் (2)
தேன்பா அர்ச்சனை மலராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி 2

குழலும் யாழும் நானிசைத்துக்
கனிவுடன் உன்னையே பண்ணிசைத்து
உன்னுடன் ஒன்றாய் நானிசைத்து (2)
பண்ணுடன் பாடுவேன் பாரினிலே

அடி 3

வீணையில் நரம்பினை மீட்டிடும்போது
எழும்பிடும் இனிய நாதங்களில்
எழுந்திடுவாய் எம் நாயகனே (2)
பொழிந்திடுவாய் உன் அருள்மழையே.

## 17. என் தெய்வம் உன்

எடுப்பு

என் தெய்வம் உன் அன்பு தெரிந்ததிங்கே
என் நெஞ்சம் மகிழ்வாலே நிரம்பிடுதே
என் யேசுவே என் நாளுமே
உன் பாடல் நான் பாடுவேன்

அடி 1

துன்பம் வரும் நேரம் சிறு பொழுதேனும்
நீ என்னைப் பிரிவதில்லை ஆ......ஆ.. } 2
என்னில் வந்து நீயும் பேசிடும் போது
தனிமையே தெரிவதில்லை ஆ......ஆ...
நீ தானே எந் நாளும் துணையே
என் வாழ்வில் இனி இல்லை குறைவே (2)

அடி 2

எண்ணில்லாத குறைகள் என்னிடத்தில்
இருந்தும்
நீ என்னைத் தெரிந்தெடுத்தாய் ஆ.....ஆ.. } 2
அன்பிற்காக ஏங்கும் எந்தன் உள்ள ஏக்கம்
நீ தானே புரிந்து கொண்டாய் ஆ...... ஆ...
உன்னாலே என் வாழ்வில் மகிழ்வே
உண்டாகும் பேரின்ப உறவே (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரியன்னைக்கு

### 18 அமலோற்பவியே

எடுப்பு

அமலோற்பவியே அருள் நிறைந்த தாயே
வாழ்க வாழ்க
மாசறு கன்னியே மாபரன் தாயே
வாழ்க வாழியே

தொடுப்பு

வாழ்க தாயே வாழ்க நீயே
வாழ்க வாழியவே
அன்னையே வாழ்க அமலியே வாழ்க
வாழ்க வாழ்க

அடி 1

மாமரியே மாதவளே வாழ்க வாழ்க
மாந்தர்களைக் காப்பவளே வாழ்க வாழ்க
மன மகிழ்ந்து பாடிடுவோம் வாழ்க வாழ்க
தினம் நினைந்து பாடிடுவோம் வாழ்க வாழ்க

அடி 2

இறைவனின் திருமகளே வாழ்க வாழ்க
மறைபோற்றும் பேரெழிலே வாழ்க வாழ்க
வான் மண்ணின் இராக்கினியே வாழ்க வாழ்க
வாழ்த்துகின்றோம் போற்றுகின்றோம்
வாழ்க வாழ்க

### 19 அம்மா என்று அழைத்தால்

எடுப்பு

அம்மா என்று அழைத்தால்
குழந்தாய் என்று வருவாய்
அபயம் என்று சொன்னால்
அன்பாய் தூக்கி நெஞ்சில் வைத்து
என்னைக் காத்துக் கொள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி 1

வேடிக்கையுலகம் பின்னால் நான் சென்றேன்
வேண்டியதெல்லாம் தரும் என்று நான்
சென்றேன்
மீளாத்துன்பம் நானடைந்தேன் என்நிலை
நானுணர்ந்தேன்
அம்மா உனை அழைத்தேன்

அடி 2

மின்னுவதெல்லாம் பொன்னென்று
நான்கொண்டேன்
வெளுத்தவையாவும் பாலென்று நான் உண்டேன்
பொன்னும் தீயானது பாலும் நஞ்சானது
அம்மா உனை அழைத்தேன்

## 20 மாசில்லா கன்னியே

எடுப்பு

மாசில்லா கன்னியே மாதாவே உன்மேல்
நேசமில்லாதவர் நீசரேயவாரார் வாழ்க(3) மரியே

அடி 1

மூதாதை தாயார்செய் முற்பவ மற்றய்
ஆதியில்லாதோனை மாதாவே பெற்றாய்
வாழ்க (3) மரியே

அடி 2

உன்மகன் தானே உயிர்விடும் வேளை
என்னை உன் மைந்தனாய் ஈந்தனரன்றோ
வாழ்க (3) மரியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 அன்னை உன் அருட்திரு

எடுப்பு

அன்னையுன் அருட்திரு வதனம் கண்டால் — நம்
அல்லல்கள் மறைந்துவிடும் — அவள்
கண்களில் மின்னிடும் கருணையைக் கண்டால்
கவலைகள் மறைந்து விடும்

அடி 1

வாடா வில்லியும் வாழ்த்திப் பாடிடும்
தூய்மைதான் அவள் தோற்றம் — இங்கு
தேடா மானிடர் யாருளர் தரணியில்
பாடார் அவள் ஏற்றம் — (2)

அடி 2

பொன்தாள் வெண்ணிலா தாங்கிய வதனம்
பொலிவாய் திகழ்ந்தோங்கும் — அவள்
செம்மார் சாற்றிய கரதலம் அவள்தான்
ஆண்டவர் அடிமையெனும் — (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
யாழ்ப்பாணம் — 1994

திருவழிபாடு முடிந்தபின் இப்புத்தகத்தை தயவுகூர்ந்து ஆலயத்தினுள் வைத்து விட்டுச் செல்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org